பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை–28 அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: டாக்டர். இரா.செல்வராஜ்., இ.ஆ.ப.,

ந.க.எண். 9717/2018/அ6 நாள்: 02.08.2022

பொருள் : கருணை அடிப்படையில் பணிநியமனம் – பேரூராட்சிகள் நிர்வாகம் – கோயம்புத்தூர் மண்டலம் – கோயம்புத்தூர் மாவட்டம் – திருமலையாம்பாளையம் பேரூராட்சியில் செயல் அலுவலராகப் பணிபுரிந்து – 19.08.2015–இல் பணியிடை காலமான தேவிகா (திருமதி) வி – என்பவரின் வாரிசுதாரரும் மகளுமாகிய ஹரிப்பிரியா (திருமதி) மு – என்பவரை கருணை அடிப்படையில் வெள்ளலூர் பேரூராட்சியில் வரித்தண்டலராகப் பணிநியமனம் செய்யப்பட்டது – 23.06.2017 முற்பகல் வரித்தண்டலர் பணியில் சேர்ந்தது – பணிவரன்முறை செய்தல் – ஆணையிடப்படுகிறது

உதவி இயக்குநர் அலுவலகம் 05 AUG 2022 கோயம்புத்தூர் - 18.

பார்வை :
1. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள் ந.க.எண்.1010/2017/பே.2 நாள் 19.06.2017
2. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் கடித ந.க.எண். 1062/2018/பே.2 நாள்.19.07.2018
3. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.9717/2018/அ9, நாள்.10.08.2018
4. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(கியூ) துறை, நாள்.26.02.2021.
5. அரசு கடித எண்.20232/பேரூ.1/2018–2, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை, நாள் 04.07.2022

*******

ஆணை:–

கோயம்புத்தூர் மண்டலம், கோயம்புத்தூர் மாவட்டம், திருமலையாம்பாளையம் பேரூராட்சியில் செயல் அலுவலராகப் பணிபுரிந்து 19.08.2015–ல் பணியிடை காலமான திருமதி.வி.தேவிகா என்பவரின் வாரிசுதாரரும் மகளுமாகிய திருமதி.மு.ஹரிப்பிரியா என்பவருக்கு பார்வை 1–ல் காணும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள் ந.க.எண்.1010/2017/பே.2 நாள்.19.06.2017–ன்படி கருணை அடிப்படையில் கோயம்புத்தூர் மாவட்டம், வெள்ளலூர் பேரூராட்சியில் வரித்தண்டலராகப் பணிநியமனம் செய்யப்பட்டு 23.06.2017 முற்பகல் முதல் வரித்தண்டலர் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வந்துள்ளார். அதன் தொடர்ச்சியாக தற்போது தாளியூர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

இந்நிலையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.மு.ஹரிப்பிரியா என்பவரது பணியினை வரன்முறை செய்தல் தொடர்பாக பார்வை 3–ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் அரசுக்கு கருத்துரு அனுப்பி

வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பார்வை 5–ல் காணும் அரசு கடிதத்தில் அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(கியூ) துறை, நாள்.26.02.2021–ல் வெளியிடப்பட்ட வழிமுறைகளின் படி ஆய்வு செய்து நியமன அலுவலருக்கு ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர் மூலம் பணிவரன்முறை செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நேர்வில் இளநிலை உதவியாளர்/ வரித்தண்டலர் பணியிடங்களின் நியமன அலுவலரான மாவட்ட ஆட்சித்தலைவருக்கு (Appointing Authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற **பேரூராட்சிகளின்** ஆணையர் நிலையில் தனியரது பணியினை வரன்முறை செய்திடவும் தெரிவிக்கப்பட்டது

எனவே மேற்காணும் அரசு கடிதத்தின் அடிப்படையில் கோயம்புத்தூர் மாவட்டம், தாளியூர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.மு.ஹரிப்பிரியா என்பவரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாள் முதல் கீழ்க்காணும் விபரப்படி பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர் / பதவி /தற்போது பணிபுரியும் அலுவலகம் | கருணை அடிப்படையில் முதன் முதலில் பணி நியமனம் செய்யப்பட்ட பேரூராட்சி | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை நாள் |
|---|---|---|---|---|
| 1 | திருமதி.மு.ஹரிப்பிரியா இளநிலை உதவியாளர் தாளியூர் பேரூராட்சி | வெள்ளலூர் பேரூராட்சி | 23.06.2017 மு.ப | 23.06.2017 மு.ப |

மேலும், தனியரின் பணிப்பதிவேட்டில் இப்பொருள் தொடர்பாக உரிய பதிவுகளை மேற்கொள்ளவும், பதிவுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான பதிவேட்டின் நகலினை அனுப்பிடவும் கோயம்புத்தூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரை கேட்டுக் கொள்ளப்படுகிறது

பேரூராட்சிகளின் ஆணையர்

<u>பெறுநர்</u>

திருமதி.மு.ஹரிப்பிரியா,
இளநிலை உதவியாளர்,
தாளியூர் பேரூராட்சி.
கோயம்புத்தூர் மாவட்டம்
(கோயம்புத்தூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் வாயிலாக)

<u>நகல்:–</u>

1. மாவட்ட ஆட்சித்தலைவர், கோயம்புத்தூர் மாவட்டம்
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கோயம்புத்தூர் மண்டலம்
3. செயல் அலுவலர், தாளியூர் பேரூராட்சி
4. அ6 இருப்புப் கோப்பு

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்
அலுவலகம், கோயம்புத்தூர் மண்டலம்.
ந.க.எண்: 1062/2018/பே2
நாள்: 05.08.2022

சார்வு செய்யப்படுகிறது

பெறுநர்:
திருமதி. மு.ஹரிப்பிரியா,
இளநிலை உதவியாளர்

பேரூராட்சிகளின் உதவி இயக்குநா
கோயம்புத்தூர் மண்டலம்